JL
J684-n211,N27
N29.2.10-11
159619

உ

"ஏல விவசாயி"

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து
வெளிவரும் ஓர் மாதப் பத்திரிகை.

ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கேது வேண்டும்?

(பாரதியார்)

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.

மலர் 2	}	உத்தமபாளையம். விபவ௵ தை௴ 1929௵ ஜனவரி—பிப்ரவரி௴	{	இதழ் 10

26 MAR 192

கடவுள் வணக்கம்.

பெருவெளியா யைம்பூத பிறப்பிடமாய்ப் பேசாத
பெரிய மோனம்
வருமிடமாய் மனமாதிக் கெட்டாத பேரின்ப
மயமாய் ஞானக்
குருவருளாற் காட்டிடவு மன்பரைக்கோத் தறவிழுங்கிக்
கொண்டப் பாலுந்
தெரிவரிதாய்க் கலந்தநெந்தப் பொருளந்தப் பொருளினையாஞ்
சிந்தை செய்வாம். (தாயுமானவர்.)

இனி என் செய்வது?

சில காலம் நமது தலைமைச் சங்கம் அசைந்தது, ஆடியது அப்பால் அசைவற்று அப்படியே நின்று அடங்கி விட்டது. ஏன் என்று கேட்பாரில்லை. என்ன! என்று கேட்பவருக்கு எவரும் பதில் சொல்வாரில்லை. பெயரளவிலிருந்த காரியாலயமும் மூடப் பட்டது. கிளைச்சங்கங்கள் எப்படியோ இருக்கின்றன.

தலைமைச் சங்கம் வேண்டுமேயென்ற எண்ணம் தலைவர்களுக் குக் கிடையாது. அடிக்கடி தலைமைச் சங்கத்தைப் பற்றி எழுதி எழுதி நானும் அலுத்துவிட்டேன். ஏல விவசாயிகளும் இதைப் பற்றி வாசித்து வாசித்து ஓய்ந்துவிட்டார்கள். இனி நான் என்ன செய் வதென்று எனக்குத் தோன்றவில்லை. இனி ஏல விவசாயிகள் என்ன செய்யப்போகிறார்கள்? ஏல விவசாயிகளின் ஒற்றுமை யின்றி ஏலத்திற்கு நல்ல விலை கிடையாது. ஏல விவசாயிகளுக்கு இனி எவ்வளவோ கஷ்டங்கள் நஷ்டங்கள் உண்டாகப் போகின் றன.

கவனியுங்கள்! கவனியுங்கள்!!

பா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

159619
சென்னை-600 008.

ஏல விவசாயிகளுக்கோர் எச்சரிக்கை.

சென்ற மாதத்திய ஏல விவசாயியில் 'ஏல விவசாயிப் பத்திரி கையைப் பற்றி' என்னும் தலைப்பின் கீழ் ஆசிரியர் எழுதியுள்ள விஷயங்களை நீங்கள் ஊன்றி வாசித் துணர்ந்தீர்களா? வாசியாதிரு ப்பின், உடனே அதை எடுத்து வாசிப்பீர்களாக. தலைவர்களே! கிளைச் சங்கங்களின் காரியதரிசிகளே! ஏல விவசாயிகளே! "இப் படியிருந்தால் ஏல விவசாயியை நடத்த முடியாத கஷ்ட நிலை சமீ பத்தில் வந்துவிடும் என்று எச்சரிக்கிறேன்" என்று அதில் ஆசிரி யர் கூறியுள்ள மொழிகள், உங்கள் கண்களில் பட்டு அழுத்தவில் லையா? மனத்தை வருத்தவில்லையா? அதில் கண்ட குறைகளை நீக் குவதற்கு இதுவரையில் எவ்வளவு தூரம் ஏற்பாடு செய்திருக்கிறீ ர்கள்? இனிமேல் என்ன ஏற்பாடு செய்யப் போகிறீர்கள்?

தலைவர்களே, ஏலக் குடியானவர்களே,

நமது ஏல விவசாயிப் பத்திரிகையானது தோன்றி இன்னும் இரண்டு ஆண்டுகள் கூடப் பூர்த்தியாகவில்லை. இந்தச் சொற்ப காலத்திற்குள்ளாக அது நமது ஏல விவசாய உலகத்திற்கு எவ்வ ளவு தூரம் பாடுபட்டிருக்கிறது? இனி எவ்வளவு தூரம் பாடுப டப் போகிறது? என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள். ஏல விவசாயத் தில் நூதன முறைகள், கூட்டுறவின் மேன்மை, சங்கங்களின் பிரயோஜனம், ஒற்றுமையின் உயர்வு, மற்றும் ஏல விவசாயிக ளின் அபிவிருத்திக்குரிய அநேக நல்ல வழிகளையெல்லாம் நமது ஏல விவசாய உலகத்திற்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோன்று

விளக்கிக் காட்டி யிருக்கிறது. 'ஏல விவசாயி' தோன்றின இந்தச் சொற்ப காலத்திற்குள்ளாக அது நமக்குச் செய்திருக்கும் தொண்டு மிகவும் அபாரமானது. அதன் ஆசிரியர் ஸ்ரீமான் R. நாராயணசாமி அவர்களின் அரிய உழைப்பு மிகவும் போற்றத் தக்கது. ஏல விவசாய இளைஞர்களே! இன்னுமா தூக்கம்? உலகம் முழுவதும் இளைஞரின் இயக்கம் ஏற்பட்டு வளர்ந்து வருவதை நீங்கள் அறியீர்களா? "எழுமின்; விழிமின்; கருதிய கருமம் கைகூடும்வரை உழைமின்" என்ற விவேகானந்தரின் வீர மொழிகள் உங்கள் செவிகளில் விழவில்லையா? ஏன், நீங்கள் உங்கள் அனுபவங்களை, அவாக்களை, அபிப்பிராயங்களை, குறைகளை நமது ஏல விவசாயியின் வாயிலாய் வெளியிட முன் வரக்கூடாது?

நிற்க, ஏல விவசாய விருத்திக்கு வழிகாட்டியாயும், ஊன்றுகோல் போன்றும் தோன்றியுள்ள நம் உயர் மாசிகையாம் ஏல விவசாயி பணக் கஷ்டத்தாலும் இதர குறைகளாலும் இடைவெ நின்று விடும் பக்ஷத்தில் நமது முன்னேற்றத்திற்கு எவ்வளவு தூரம் பங்க மேற்படு மென்பதை நமது தலைவர்கள் நன்கு யோசித்து அதன் குறைகளை நீக்கி அது முன்னிலும் பன்மடங்கு அபிவிர்த்தியுடன் வெளி வந்து வேலை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கூடிய சீக்கிரம் செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். நமது 'ஏல விவசாயி' நீடூழி நின்றுலவுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவானாக.

A. சுருளியாண்டி கௌட.

இந்திய கிராம ஜனங்களின் ஜீவனவிருத்திகள்.

நமது தேசத்தை கிராமாந்தரங்கள் மிகுதியாக விருக்கப்பட்ட தேசம் என்று கூறுகிறார்கள். இப்பெயர் எவ்வளவு வரையிலும் சரியான தென்பதை ஒருவரும் அறியவில்லை. ஸென்ஸஸின்படி இந்திய கிராமமென்பது வரி வசூலிற்காக வேண்டிய வீடுகளின் கும்பல்களையுடைத்தான ஒரு கிராமாந்தர ஸ்தலம். இந்தியாவில் 685,000 கிராமங்களிருக்கின்றன. அவைகளில் மொத்த விஸ்தீர்ணம் ஏறக்குறைய 2 கோடி சதுரமைல்கள். அவைகளில் வாஸம் செய்யும் மொத்த ஜனசங்கியை கிட்டத்தட்ட 230 கோடிகள். 3316 பட்டணங்களுமிருக்கின்றன. அவைகளில் மொத்த ஜனஸங்கியை ஏறக்குறைய 30 கோடிகள். சராசரியில் ஒரு கிராமத்தின் ஜனத்தொகை 400.

தேசத்தின் மொத்த ஜனத்தொகையில் 10ல் ஒரு பங்குதான் பட்டணங்களில் வாஸம் செய்கிறார்களென்பதே, நம்முடைய தேசத்தில் கைத்தொழில்கள் மேல் நாடுகளிற்போல் அமையவில்லையென்பதை நிரூபிக்கிறது. விவசாயமும் யந்திரங்களில்லாமல் வீடுகளில் அநுஷ்டிக்கப்படக்கூடிய தொழில்களுமே பெரும்பான்மையாக அநுஷ்டிக்கப்படுகின்றன. பயிர்த் தொழிலின் மூலமாகவும் ஆடு மாடுகளைக்கொண்டும் ஜீவனம் செய்யப்பட்ட பெயர்கள் ஜனத்தொகையில் முக்கால் பங்கு. அதில் 17¼ கோடி ஜனங்கள் வியவஸாயிகள், 4½ கோடி ஜனங்கள் பயிர் ஊழியர்கள், சிலர் காரியஸ்தர்களாகவும் ஏஜண்டுகளாகவுமிருக்கிறார்கள். சற்றேறக்குறைய 33 கோடி சதுர மைல்கள் நிலங்கள் பயிர் செய்வதற்கு உபயோகமானவை. ஆனால் அந்த ஸங்கியையில் 6 லக்ஷம் சதுர மைல்கள்தான் சாகுபடியிலிருக்கின்றன. பயிர்த் தொழில் பிர

தேசங்களில் சராசரியில் சதுரமைல் ஒன்றுக்கு 382 பெயர்களாக கிராம ஜனங்கள் வாசம் செய்கிறார்கள். மேனாட்டு தேசங்களில் சதுரமைல் ஒன்றுக்கு சராசரியில் 250 பெயர்கள்தான் பயிர்த் தொழில் பிரதேசங்களில் வசிக்கிறார்களாம். இந்தியாவில் ஏகர் ஒன்றிற்கு விளைவு இங்கிலீஷில் ஏகர் ஒன்றுக்கு ஏற்படுகிற விளைவில் பாதி, பிரான்ஸில் ஏற்படுகிற விளைவிலும் ஏறக்குறையபாதி, எகிப்தின் விளைவில் மூன்றில் ஒரு பங்கு, ஜபானின் விளைவில் கால் பங்கு. நம்முடைய தேசத்தில் 5 விவசாயக்குடும்பங்கள் 8, 9 குடும்பங்களின் சவாக்ஷணைக்குப் போதுமான மட்டும்தான் தான்யங்களை உற்பத்தி செய்யக்கூடும். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் 5 குடும்பங்களின் உழைப்பால் ஏற்படும் உற்பத்தி 50 குடும்பங்களை சவாக்ஷணை செய்யக்கூடுமாம். இதற்குக் காரணம் என்னவெனில் இந்திய விவஸாயிகள் வெகு வெகு காலங்களாக அநுஷ்டித்து வந்திருக்கிற பயிர் முறைகளையே அநுஷ்டிக்கிறார்கள். அவர்கள் நவீன வழிகளை அநுசரிக்க இஷ்டப்படுகிறதில்லை. நல்ல விதைகளை உபயோகிக்கிறதில்லை. பயிர் நோய் விஷயங்களை அறியாமலிருக்கிறார்கள். புதிய கருவிகளையுபயோகிக்கத் துணிகிறதுமில்லை. இப்பொழுதுதான் இவ்விஷயங்களைச் சற்று கவனித்துப்பார்க்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

வயல்கள் துண்டு துண்டாகவிருக்கின்றன. ஒருவனுடைய நிலவிஸ்தீரணம் அவனுடைய முயற்சிகளுக்கே போதாமலிருக்கிறது. குடும்பங்களில் பாகங்கள் பிரிக்கப்படும்பொழுது நிலங்கள் துண்டுகளாகப் பாகிக்கப்படுகின்றன. இப்படி ஏற்பட்ட சிறிய துண்டுகள் விவசாய முயற்சிகளுக்கு வேண்டிய அளவுகளில் இருக்கிறதில்லை. நிலத்தின் சொந்தக்காரன் அதன் சம்பந்தமாக அதிகச்செலவையும் செய்ய முடிகிறதில்லை. அவனுக்குச் சாகுபடியில் அதிக உற்சாகமும் ஏற்படுவதில்லை.

ஆறுகளில் அருகிலிருக்கப்பட்ட நிலங்களில் வண்டல் படிகின்றன. மற்ற நிலங்களின் சாரம் நாளடைவில் குறைவு பட்டுப்போகிறது. எருமுட்டையின் நிமித்தம் சாணிகள் உபயோகிக்கப்படுகின்றன. எலும்புகளும், பாஸ்பேட்களும் இதர தேசங்களிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மழை ஒரு வருஷத்தில் போல் இன்னொரு வருஷத்தில் பொழிகிறதில்லை. பயிர்கள் ஜலத்திற்காகத் தவித்துக்கொண்டிருக்கும் காலங்களில் அவைகளுக்கு உபயோகமாகும்படியான நீர் சௌகரியங்களின் விஷயமாய் முயற்சிகள் கைக்கொள்ளப்படுகிறதில்லை. வருஷத்தில் 9 மாதங்களில் உஷ்ணத்தின் உபாதையினால், விவசாயிகள் தக்கபடி வேலை செய்யக்கூடுகிறதில்லை.

அறுவடையான பிறகு தான்யத்தைக் கொட்டிவைத்துக் கொள்வதற்கு இட சௌகரியங்களில்லாமையால் விவசாயிகளுக்கு அறுவடையான வுடனேயே மாசூல்களை விற்பனை செய்யும்படி நேரிடுகிறது. ஆகையால் அவர்கள் அவைகளைக் குறைந்த விலைக்கு விற்கும்படி ஏற்படுகிறது.

நம்முடைய தேசத்தின் ஏற்றுமதி வியாபாரமானது கணக்கில்லாத தரகர்களின் மூலமாக வேலைசெய்து நியாயமில்லாத அளவுகளில் இலாபங்களையடைந்து வருவதால் கெட்டுப்போய்க் கொண்டு வருகிறது. மேலும், நமது தேசத்தில் தான்யம், உப்பு, துணி இவ்வகை வஸ்துக்களில் வியாபாரஞ் செய்யும் சிறிய வர்த்தகர்களிடத்தில் நம்முடைய விவசாயிகள் கடன்களை வாங்கிக் கொண்டு அறுவடையான உடன் தான்யங்களைக்குறைந்த விலைக்கு அவர்களுக்கு விற்று ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். அவ்வித ஒப்பந்தங்களில்லாவிட்டால் தான்யங்கள் அறுவடையான கொஞ்ச காலத்திற்குப்பின்பு தக்க இடங்களில் நல்லவிலைக்கு விற்கப்பட்டு விவசாயிகள் இலாபங்களை அடையக்கூடும். விவசாயிகளுக்கு சிறிய வியாபாரிகளின் கணக்குகளில் தான்ய அளவில்காட்டப்படுகிறதில்லை. பணத்தொகையாலேயே குறிக்கப்படுகின்றன. ஏழ்மைத்தனத்தினால் விவசாயிகள் தான்யங்களை தூரப்பிரதேசங்களிற்குக்கொண்டு போய் நல்லவிலைக்கு விற்கக்கூடுகிறதில்லை. அறுவடையாகிற தான்யங்களைக் கொட்டிவைப்பதற்காகவும்

அவைகளைத்தருக்க இடங்களுக்குக் கொண்டு போய் நல்லவிலைக்கு விற்கவும் கூட்டுறவு ஏற்பாடுகள் அமையவேண்டும். அவைகள் அமைந்தால் விவசாயிகளுக்கு க்ஷேமம் ஏற்படக்கூடும்.

கவர்ண்மெண்டார் கொஞ்சகாலமாய் விவசாய விஷயங்களில் கவனத்தைச்செலுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். இதற்குமுன் அவர்களுக்கு நிலங்களை உத்தேசித்து நிலவரி வசூல் ஒன்றுதான் நோக்கமாகவிருந்தது. மஹாராண கவர்ண்மெண்டுகள் நிலங்களிலிருந்து ஏராளமான வரித்தொகைகளை வசூலித்து வருகிறார்கள். வரித்தொகை கவர்மெண்டாரின் பாகம். அது முதலைமுதலில செலுத்தப்படவேண்டியதாக விருக்கிறது. வரி விதிக்கிற விஷயத்தில் கவர்ண்மெண்டார் உற்பத்திக்கேற்றபடி அதை விதிக்கிறதில்லை.

வெகுநாளைக்கு வெகுநாள் வரையில் நம்முடைய தேசம் விவசாய தேசமாகவே இருக்க வேண்டியதாக விருக்கிறது. நம்முடைய தேசத்தில் உஷ்ணம் அதிகமானதால் தொழில்கள் மேனாடுகளைப்போல் அமைவது கஷ்டம். விவஸாய அபிவிருத்தி முயற்சிகள் ஏற்படுவதால் விவஸாயம் மேல் மேல் அப்பியஸிக்கப்படுவது தான் ஜனங்களின் தகுமான ஜீவனவிருத்தியாகும். விவஸாயத்தை விருத்தியாகக் கொண்டுள்ள ஜனங்களின் சங்கியை 1891ல் மொத்த ஜனத்தொகையில் 100க்கு 61 ஆகவிருந்தது, 1901ல 66 ஆக விருந்தது, 1911ல் 71 ஆக விருந்து, '1921ல் 73 ஆக ஏற்பட்டு விட்டது. இனி அந்த சங்கியை உயருமென்பதில் சந்தேகமே யில்லை.

1880-ம் வருஷத்தில் பஞ்சவிசாரணை சபையார் தேசத்தில் பயிர் ஊழியர்கள் அளவிற்கு மீறியிருப்பதுதான் தேசத்தின் செல்வ க்ஷேம நிலையைக் குறைக்கிறதென்று மொழிந்திருக்கிறார்கள். அந்நியநாடுகளுக்கு ஏற்றுமதிக்காகப பொருள்களை உற்பத்தி செய்கிற நிலங்களின் மொத்த விஸ்தீர்ணத்தை மொத்த சாகுபடி விஸ்தீரணத்திலிருந்து கழிப்போமாகில் சராசரியில் ஜனத்தொகையில் ஒவ்வொரு நபருக்கு 2 ஏகரா நிலம்தான் தேறுகிறது. இதைக்கொண்டு கோடா கோடி இந்திய ஜனத்தொகையின் ஊணவும் உடையும் ஏற்பட வேண்டியதாகவிருக்கிறது.

விவஸாய உற்பத்திக்கும் முயற்சிகளுக்கும் யாதொரு பங்கமின்றி பயிரூழியர்கள் சிலர் அவ்விருத்தியிலிருந்து நீக்கப் படக்கூடும். யந்திரங்களும் கருவிகளும் அதிகமாக உபயோகப் படுத்தப்படுமாகையால் அநேக பயிரூழியர்களுக்கு வேலை யில்லாமல் போய் விடும். ஆகவே, இதர தொழில்கள் ஏற்படுத்தப் பட்டாலொழிய ஜனங்களின் க்ஷேம நிலையுயராது.

நமது தேசத்தில் 10000 பெயர்களில் 7000 பெயர்கள் பயிரூழியத்தில் அமைந்திருக்கிறார்கள். இன்னும், மொத்த ஜனத்தொகையில் பாதிப்பெயர்கள் தான் குடும்பங்களில் வரும்படியை யுயர்த்துகிறார்கள், 10 லக்ஷம் பெண்பிள்ளைகளும் வேலைசெய்து ஸம்பாதித்து குடும்பங்களை சவரக்ஷணை செய்கிறார்கள். ஆடு மாடுகளின் மூலமாக ஜீவனஞ் செய்கிறவர்களுள் 100க்கு 70 பேர்கள் கூலிக்காரர்கள். 18 கோடி மாடுகளிருக்கின்றன. ஆனால் அவைகள் வெகுவாய் நோஞ்சலாகவும், நோயுள்ளவைகளாகவுமிருக்கின்றன. 3 கோடி வெள்ளாடுகளிருக்கின்றன. ஆடு மாடுகள் பயிர்களுக்குள் புகுந்து பயிர் நஷ்டங்களை விளைவிக்கின்றன. மாடுகளில் அபிவிருத்தி வழிகளும், கோழிவளர்ப்பு வழிகளும் ஜனங்களுக்குத் தெரியாது.

நம்முடைய தேசத்தில் யந்திர சாலைத் தொழில்களல்லாத வீடுகளில் அனுஷ்டிக்கக்கூடிய சிறிய தொழிலகளை அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. அத் தொழில்களால் உண்டாக்கப்படும் வஸ்துக்கள் அந்தந்த ஊர்களின் ஜனங்களுக்கு வேண்டிய அளவிற்கு மேல் உண்டாக்கப்படுகிறதில்லை. ஆனால் யந்திர சாலைகளில் தயாரிக்கப்பட்ட வஸ்துக்களைக் காட்டிலும் கையினால் தயாரிக்கப் பட்டவை வெகு திறமாக விருக்கிறபடியால் யந்திர உபயோகமில்லாமல் வீடுகளில் அநுஷ்டிக்கப்படுகிற கைத் தொழில்களுக்கு அழிவு ஏற்படாது. வீடுகளில் அநுஷ்டிக்கப்படுகிற தொழில்களில் குடும்பத்தாரனைவரும் ஒன்று சேர்ந்து சந்தோஷத்துடன் வேலை செய்கிறார்கள். வேலையில் ஊக்கமும் புத்தியும் நன்றாக செலுத்தப்படுகின்றன.

விவசாயம் மாத்திரமே ஜனங்களால் அநுஷ்டிக்கப்பட்டால் அவர்கள் விவேகத்தை அடையமாட்டார்கள். அவர்கள் தொழில்களையும் அநுஷ்டிக்கவேண்டும். மேலும் மழையில்லாமையாலும், இன்னும் இதர இடையூறுகளாலும் வியவஸாயம் எப்பொழுதும் ஒரே மாதிரி நடத்தப்படக் கூடுமென்பதுமில்லை.

கிராம ஜனங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட துணி, பானை சட்டி, மரச்சாமான்கள், பித்தளை, வெண்கல, செப்பு சாமான்கள் பட்டண ஜனங்களினால் உற்பத்தி செய்யப்படுகிறவைகளைக் காட்டிலும் பல மடங்கு அதிகமாகவிருக்கின்றன. கைத்தொழில் அநுஷ்டிக்கப்படுவதற்கு ஜனங்களின் ஐக்கிய வாழ்வு சாதகப்படுத்துகிறது. அத்தொழிலுக்கு மூலதனமும் வேண்டியதில்லை. கைநெசவினால் தான் உயர்ந்த ஆடைகள் நெய்யப்படக்கூடும். கிராம ஜனங்கள் கைநெசவை ஸஹாய ஜீவனமாக வைத்துக்கொண்டால் அவர்களுடைய க்ஷேமநிலையுயரும்.

வியவஸாயிகள் கருவிகளையும், விரை தினுசுகளையும் வாங்குகிற விஷயத்திலும், அறுவடையான மாசூலை விற்கிற விஷயத்திலும் கூட்டு வழிகளை யநுஷ்டிக்கிறதில்லை. ஆகையால், அவர்கள் வேண்டிய கருவிகளையும் நல்ல விரைகளையும் வாங்கக்கூடுகிறதில்லை. மாசூலையும் தக்கவிலைக்கு விற்கக்கூடுகிறதில்லை. அவர்கள் ஒன்று சேர்ந்து வாங்கவும் விற்கவும் தொடங்கினால் அதிகச் செலவும் ஏற்படாது. அதிக லாபமும் கிடைக்குமென்பதை யறிந்து கூட்டுறவு சங்கங்களாக ஏற்படவேண்டும்.

வியவஸாயப் பொருள்களை ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குக் கொண்டுபோவதற்குத் தக்கபடி பிரயாண வசதிகள் இல்லை. கிராமங்களில் வயல்களின் இடையிலுள்ள பாதைகள் தான் உபயோகப்படுகின்றன. மேலும் ரஸ்தாக்கள் குப்பை நிறைந்தும், மழை காலத்தில் சேருடனும் இருப்பதால் அதில் பிரயாணம் செய்வது கஷ்டமான விஷயம். ஆகையால் கிராமத்தவர் வெகு தூரப் பிரயாணத்தை விரும்புகிறதில்லை. பிறந்த ஊர்களிலேயே

ஜனத் தொகையில் 10-ல் 9 பேர்கள் வாஸமாயிருந்து விடுகிறார்கள். ரெயில்வேக்கள் மேனாட்டு வர்த்தக விஷயத்தை முன்னுக்குக்கொண்டு வரவேண்டிய நோக்கமாக ஏற்பட்டிருக்கின்றனவே ஒழிய உள் நாட்டில் கிராமத்தாருக்கு அநுகூலமாக ஏற்படவில்லை. மேலும் மேற்சொல்லிய ரெயில்வேக்களின் மூலமாக நமது உற்பத்திகள் வெளி தேசங்களுக்கு அநுப்பப்படுவதால் நமது நாட்டில் பஞ்சங்கள் ஏற்படுகின்றன வென்பதும் சிலரின் அபிப்பிராயம்.

வியவஸாயத்திற்கு நீர்ப்பாசனவிஷயம் முக்கியமானது. நமது தேசத்தில் கால மழைகள் தவறுகின்றன. பாசனத்திற்கு நீர் வேண்டியபோதெல்லாம் அகப்படவேண்டியதற்கு ஏற்பாடுகளும் முயற்சிகளும் தாமஸமில்லாமல் கைக்கொள்ளப்பட வேண்டும்.

அந்நியநாடுகள் விளைந்த தானியங்களைக்கொண்டுபோகின்றன. கடன் கொடுத்து பலவந்தப்படுத்துகிற முதலாளிகளுக்கு அறுவடையாகிற மாசூல்கள் ஈனவிலைக்கு விற்கப்படுகின்றன. தகுந்த திரவிய சகாய ஏற்பாடு அமைந்தால் அவ்வளவு லாபமும் கிராமத்தாரைச் சேரும் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே இந்திய ஜனங்களின் செல்வ நிலை உயர வேண்டுமானால் தேசத்தில் வியவஸாயம் தவிர இதர தொழில்கள் அமைய வேண்டும். இந்திய ஜனங்கள் இதர தொழில்களில் ஆசையை வளர்க்க வேண்டுமானால் அவர்கள் குழந்தைகளாகப் பள்ளிக்கூடங்களில் படிக்கும்போதே அவ்விஷயங்களில் போதிக்கப்பட வேண்டும். தற்காலத்தில் பிள்ளைகள் 15 வருஷ காலம் பொதுக் கல்வியைக் கற்பது தேச க்ஷேம விருத்திக்கும் அவர்கள் கஷ்டமில்லாமல் ஜீவனங்களை அநுஷ்டிப்பதற்கும் ஏற்றதாயில்லை. பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு கருவிகளை யுபயோகிக்கிற வழிகளில் போதனைகளும், தோட்டம் போடுவதில் போதனைகளும், கூட்டு வழிப் போதனைகளும் செய்யப்பட வேண்டும்.

"ரூரல் இந்தியா"

இயந்திர யுகம்.

மஹாஅலெக்ஸாண்டர் இந்தியாவை ஜெயிப்பதற்காகப் போன போது அவருடைய பிரயாணத்தின் கடைசிக்குப் போய்ச் சேர சுமார் ஒரு வருஷம் ஆயிற்று. தற்காலத்தில் நீங்கள் (Angora) அங்கோராவில் இருந்து கல்கத்தாவுக்கு ஆகாயக் கப்பலில் சுமார் மூன்று நாட்களில் பறந்து செல்லலாம். (Caesar) ஸீசர் எகிப்து தேசத்திலிருந்து இத்தாலிக்குத் திரும்புவதற்கு மூன்று மாதமாயிற்று. இக்காலத்தில் (Lloyd Steamer) லாயிட் என்ற நீராவிக் கப்பலில் 3 நாட்களில் கொண்டுபோய் விடுகிறது. (Goethe) கதே என்பவர் (Weimor) வெய்மோரில் இருந்து (Verona) வெரோனாவுக்குப் போக இரண்டுமாதமாயிற்று. இப்போது 24 மணி நேரத்தில் செல்லலாம். நெப்போலியன் ருஷியாவிலிருந்து திரும்பிப் போகும்போது அவரை அதி வேகமான குதிரைகள் பாரிஸ் (Paris) இல் இருந்து (Warshaw) வார்ஷாவுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கப் பத்து நாட்கள் ஆயின. இன்று நீங்கள் அதே தூரத்தை எக்ஸ்பிரஸ் ரயில் வண்டியின் உதவியால் 36 மணி நேரத்தில் பிரயாணம் பண்ணிவிடலாம். லிங்கன் அமெரிக்கா இந்தியானாவிலிருந்து நியூ ஆபர்லியன்ஸுக்குப் போகும் போது மூன்றுமாத காலம் ஓடத்தில் இருக்க வேண்டியிருந்தது. இக்காலத்திலோ அப்பிரயாணத்தை ரயில் வண்டியினால் 24 மணி நேரத்தில் முடிக்கலாம். நூறு ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்திலிருந்து (New York) நியூயார்க்குக்குப் போக வேண்டுமானால் 6 வாரம் வேண்டியிருந்தது. இப்போது ஒரு ஆகாய விமானம் அவ்விடத்துக்கு 5 நாட்களில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது.

ஆனபோதிலும் அறிவாளிகளும் சித்திரக்காரரும் சகல வித கதை உண்டு பண்ணுபவர்களும் இவ் வேகமான சக்தியுடன் உக்கிரமாய்ச் சண்டை செய்திருக்கிறார்கள். இன்னும் சண்டை செய்துகொண்டே இருக்கிறார்கள். அமெரிக்காவில் ஆத்மாவுக்கும் சாஸ்திரார்த்தத்துக்கும் உள்ள வாதம் இன்னும் இருக்கிறது. அமெரிக்காவில் ஐரோப்பாவில் இருப்பதை விட சாஸ்திரார்த்த பரம்பரை முதிர்ந்தும், ஆத்ம பரம்பரை இளமையாகவும் இருக்கிறது. இன்னும் சொல்லவேண்டுமானால் அமெரிக்காவில இவ்விருவித வாழ்வும் ஏககாலத்தில் ஆரம்பித்திருக்கின்றன. ஐரோப்பாவிலோ, ஐரோப்பிய உணர்ச்சியானது (European spirit) 2000 வருஷங்களாக எதன்மேலும் மேலும்மேலும் கொஞ்சங் கொஞ்சமாய்க் கட்டிடம் கட்டிக் கொண்டிருந்ததோ அந்தப் பெரிய கோட்டை அதைத் தாண்டி அதி வேகமாய்ச் சென்று கொண்டிருக்கும் புது யுகத்தினால் திடீரென்று வேரோடு தளர்க்கப்பட்டிருக்கிறது. ஐரோப்பாவில் இவ்விஷயம் மிகவும் ஆவேசத்துடன் தர்க்கிக்கப் படுகிறதென்பதும் எல்லாத் தேசத்தினரும், எல்லாச் சித்திரக்காரரும், சகல வித நோக்க முடையவர்களும் அதில் கலந்து கொள்கிறார்கள் என்பதும் ஆச்சரியமல்ல. ஏனெனில் ஒருபலமான விஷயத்தைப்பற்றி (நியாயமான) எவரும் வாதாடாமல் எளிதில் விட்டுவிடமாட்டார்.

ஐரோப்பிய ஊக்கம் (European spirit) புது சாஸ்திரார்த்த ஊக்கத்தினால் (New Technical spirit) தனக்கு அபாயமிருப்பதாக உணர்கிறது. இவ்வித உணர்ச்சியின் வெளித் தோற்றத்திலிருந்து பார்ப்போமானால், பழைய ஐரோப்பியச் சக்கரவர்த்திகளுக்கு ஒரு மோட்டார் வண்டி மிகவும் சிறந்ததுதான் என்பதை ஒப்புக்கொள்வதற்கு நீண்ட காலம் பிடித்தது. ஆஸ்டிரியா ஹங்கேரியின் பழைய சக்கரவர்த்தியாகிய பிரான்ஸீஸ் ஜோசப் (Prancis Joseph) ஒரு போதும் ஒரு மோட்டார் வண்டியில் ஏறினதில்லை, ஒரு கடிதமாவது டைப் ரைட்டர் (Type Writer) என்னும் மிஷின் உதவியால் எழுதினதில்லை. ஒருக்காலும் டெலிபோனில் (Tele-

phone) பேசுவதில்லை. அரசர்கள் வெற்றியுடன் ஒரு நகரத்துக்குள் நுழையும்போது கூட நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியில்தான் ஏறிச் செல்கிறார்கள். மேலும், ஐரோப்பாவில் ஒரு மோட்டாரை சவப் பாடையாகக் காண்பது இன்னும் மகா அரிதாயிருக்கிறது. ரஸ்கின் (Ruskin) ரயில் வண்டிக்கு விரோதமாக இங்கிலாந்து வழியாக மெயில் கோச்சு வண்டியில் ஏறிச் செல்லவில்லையா? இக்காலத்திலும் கூட பிரான்சு தேசத்தின் வழியாகச் செல்லும் பிரான்சுக்காரரும், அன்னியர்களும் அந்நாட்டை நன்றாய்ப் பார்த்தறியும் பொருட்டு மெதுவாகக் குதிரை வண்டிகளில் செல்ல ஏற்பாடு செய்யும் பொறுப்பு அத் தேசத்தில் இல்லாமல் இருக்கிறதா?

கதேயின் எச்சரிக்கை

அதில் நிச்சயமாய் ஓர் உண்மை புதைந்து கிடக்கிறது. நாம் எந்த வேகத்தோடு ஒவ்வொரு வஸ்துவையும் தாண்டி ஓடுகிறோமோ, எந்த வேகத்தோடு ஒவ்வொரு வஸ்துவும் நம்மைத் தாண்டி ஓடுகின்றதோ, அதே வேகம், வஸ்துக்களைப் பார்ப்பதில் இப்போது நமக்கிருக்கும் பேராவலைத் தொலைக்க வழி தேடும் என்பது நிச்சயம். நம் யோசனைக்குக் கொண்டு வரப்படும் சமாசாரங்களின் வேகமும் பூர்த்தியான நிலைமையும் அவசியம் நம் யோசனையைக் குறைக்கும். நகரும் படத் தோல்கள் (Moving picture films) அதி சீக்கிரத்தில் மறைந்து விடக்கூடிய இடைவிடாத படங்களின் தொடர்ச்சியை நமக்குக் காட்டுவதானது "வேகமே இப் புது யுகத்தின் தேவதை" (Goddess of the New Era) என்று இப்போது நாம் கொண்டிருக்கும் நினைப்புக்கு ஓர் அறிகுறியாகும். கதே (Goethe) நம்முடைய இந்தப் புது யுகத்தை முன்னாலேயே அறிந்து அதை அப்போது எச்சரித்தார். அறிக்கைப் பத்திரங்களும், பதிப்புக்களும் (Reports and impressions) அதிவேகமாய்த் தொடர்ந்து வருமென்று அவர் மனித வர்க்கத்துக்கு எச்சரிக்கை செய்தார். நூற்றாண்டு

களுக்கு முன்பு அநேக சமாசாரப் பத்திரிகைகள் வாரத்துக்கு ஒரு முறை அல்லது இரு முறைதான் வெளிவந்தன. அக்காலத்தில் அவர் அவைகள் தினம் ஒன்றுக்கு மும்முறை தோன்றக் கூடிய ஒரு பயங்கரமான காலமும் தனக்குமுன் தோன்றுவதாக எழுதினார்.

ஐரோப்பாவை மூன்று மாதங்களில் தாண்டி ஓடும் ஒரு அமெரிக்கன் ஒன்றையும் ஆழ்ந்து பார்க்க முடியாது என்ற விஷயம் தெரிந்ததே. கடைசியாக அவன் வீட்டுக்குப் போனதும் மிகவும் சிதறிய மனக்காட்சிக் கூட்டங்களினிடையே விழித்துப் பார்க்கிறான். அவன் அந்த மூன்று மாத காலத்தையும் அவன் பார்த்த 25 தேசங்களில் ஒன்றையேனும் நன்றாய்ப் பார்த்தறிவதில் செலவிட்டிருந்தால் அப்பிரயாணத்தினால் அவன் அடைந்த பயனைவிட இன்னும் அதிகமான பயனை அடைந்திருப்பான்.

இக்காலத்தில் வேகமாய்ப் பிரயாணம் செய்யும் சௌகரியம் இருப்பதால் அமெரிக்கர்கள் மேல் மிதந்த புத்தியில் பார்க்கிறார்கள். அவர்களுடைய பிரயாணத்தைப்பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அவர்கள் மறுபடியும் ஐரோப்பாவுக்குத் திரும்பும்போது அவர்களும் மற்ற ஜனங்களைப் போலவே அதிகமாய்ப் பார்த்துத் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள். ஏன்? ஏற்கனவே அதிகமாய்ப் பார்த்திருக்கவேண்டியது என்று நினைக்கிறார்கள்.

புது சாஸ்திரார்த்த முயற்சியினால் பழைய முயற்சிக்கு ஏற்படும் மற்றொரு இடைஞ்சல் என்னவென்றால் தற்காலம் பிரதி உற்பத்திகள் (Reproductions) செய்வதில் இருக்கும் இலகுவே, ஒரிஜினல் படத்தின் சக்தியானது மேலும் மேலும் அதிலிருந்து பதிப்புகள் (Copy)கள் எடுக்க இடங் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. அந்த ஒரிஜினலைப் பார்த்திராத கோடிக் கணக்கான ஜனங்கள் பிந்தினது ஒரு பிரதியுற்பத்திதான் என்பதைத் தெரியாமலே இருக்கிறார்கள்.

சஹாரா பாலை வனத்தில் பல வர்ணமுள்ள ஒரு படத்தைப் பார்த்தேன். அது என்னை ஒரு பக்கத்தில் சந்தோஷத்தாலும் மற்றொரு பக்கம் பயத்தாலும் தியங்கச் செய்தது. ஒற்றையாய் இருப்பதன் உயர்ந்த தன்மையும் ஆதியாய் இருப்பதன் தூய்மையும் எஜமானிடத்தில் பக்தியும் இவைகள் எல்லாம் இமிடேஷன்களைக் கண்ட மாத்திரத்தில் ஓடி ஒளிகின்றன. அந்த இமிடேஷன்கள் (போலி வேலைகள்) எவ்வளவுக் கெவ்வளவு மேன்மையாயிருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அபாயகரமானவையாயிருக்கின்றன. சீனதேசத்து வர்ணம் பூசும் வித்தையில் சிறந்தவர்களில் ஒருவன், மூலத்திலிருந்து உற்பத்தி செய்த, அவனுடைய மேலான இமிடேஷன் வேலைகளில் மிகச் சிறந்தவைகளைப்பற்றி இனிமேல் பேச முடியாது என்றான். அதன் கருத்தாவது திருட்டுத்தனமான போலி வேலைகளுக்கு எங்கும் இடங்கிடைக்கிறதென்பதே.

எடிசன் (Edision) என்பவர் என்னிடம் ஜெர்மானியர் வீட்டில் சங்கீதம் பாடும் வழக்கத்தை அவர் எவ்வாறு விரும்பினார் என்பதைப் பற்றியும், எல்லா தேசங்களிலும் சிறந்தவர்களாகிய சங்கீதக்காரரின் சங்கீதப் பிரியத்தை உள்ளபடி எடுத்து வெளிக்குக் காட்டக்கூடிய நாலடிச் செய்யுளின் ஆச்சரியப்படத்தக்க தன்மையைப் பற்றியும் பேசியபோது, நான் இவ்வித வஸ்து அதிவேகமாய் மேலும் மேலும் ஜெர்மெனியில் குறைந்து கொண்டே வருவதற்கு அவருடைய கிராமபோனே (Gramaphone) காரணமாயிருக்கிறது என்று சொன்னேன். நான் இவ்வாறு பேசினதிலிருந்து அவருடைய கற்பனா சக்தியின் நன்மை தீமைகளைப் பற்றி தர்க்கித்துப் பேசவேண்டுமென்பதே என்னுடைய விருப்பம் என்பதை அவர் உணர்ந்துகொண்டு அவர் மனமாறச் சிரித்தார்.

இப்போது நான் காட்டில் என்னுடைய தனிமையான வீட்டில் இருப்பதால் நாலடிச் செய்யுள்களைக் கிராமபோனில் கிட்டத்தட்ட அதன் முழு இனிமையுடன் பாடச் செய்ய முடியும்.

இப்போது ரேடியோ (Radio)வின் உதவியைக்கொண்டு, லண்டன், வியன்னா, பாரிஸ் (London, Vienna, Paris) முதலிய இடங்களில் நடக்கும் வாத்தியங்களைக் கேட்க முடியும். இதிலிருந்து இம்மாதிரி சாஸ்திரார்த்த அருந் திறமையின் நன்மைகளை, அவைகளின் பிரதி யுற்பத்தியில் உள்ள குறைகளை, நான் எடுத்துக் கூறப்புகின், ஞாயமென்று ஒப்புக்கொள்ள முடியாதபடி மிகப் பெரியவையாயிருக்கின்றன. ஆனால் நியூயார்க் (New York) கில் ஒரு வாலிபன் என்னை அவனுடைய மோட்டாருக்குள் இழுத்துக் கொண்டு போய்த் தான் எப்படி மோட்டார் ஓட்டிக்கொண்டே ரேடியோ (Radio) வினால் சமீபத்தில் நடந்த பாட்டுக்கச்சேரியைக் கேட்க முடியும் என்பதையும், அதே சமயத்தில் மோட்டார் ஓட்டிக்கொண்டே சமாசாரப் பத்திரிகைகளில் சமீபத்தில் நடந்த குற்றங்களைப் பற்றிப் படித்தது அறிந்து ஆனந்த பரவசமாக் முடியும் என்பதையும் மிகத் திருப்தியான அடையாளங்களுடன் எனக்குக் காட்டிய போது, அவன் அவனுக்கு முன்னால் இருக்கும் பாதையின் தன்மையையாவது. சங்கீதத்தின் பலனையாவது. சமாசாரப்பத்திரிகையையாவது உண்மையாய் அறிந்து மகிழ்வதற்குத் தகாத மிகவும் சிதறிய புத்தியை யுடையவனாகவும், "பல வித உணர்ச்சிகளால் நிறைந்த வெது வெதுப்பான ஓடையின் வழியே வழுக்கிச் செல்லத் தகுந்தவனாகவும் (ஒரு ஸ்திரமான யோசனையின்றி மனம் போன போக்கெல்லாம் போகக் கூடியவன்) காணப் பட்டான். இவ்வாறே மனிதனின் ஞாபகப் பலம் குறைவடைந்து கொண்டிருக்கிறது.

ஜனங்கள் யாத்திரைகளிலிருந்தும் படக்காட்சிச் சாலைகளில் (Picture houses) இருந்தும் ரேடியோ வைத்திருக்கும் இடங்களில் இருந்தும் வீட்டுக்குத் திரும்பிவந்து தூங்குவதற்காக உடைகளைக் கழற்றும்போது தாங்கள் அதுவரை நன்றாய்ப் பரீட்சித்துப் பார்த்துப் பழகித் தெரிந்த விஷயங்களைப் பின்

னேக்குங்கால் பூர்வ சங்கதிகளை ஞாபகப்படுத்தும் ஒரு வித மூடுபனிக்கிடையே அங்கங்கே மேலும் கீழும் துள்ளிக்கொண்டிருக்கும் ஒரு வார்த்தை, ஒரு குரல் அல்லது ஒரு படம்போன்ற இவைகளே ஞாபகத்தில் நிற்கின்றன. இம்மாதிரி மனிதனுக்கு ஒரு உபந்நியாசம் அல்லது நடை, நக்ஷத்திரங்கள் நிறைந்த ஆகாயங்களைப் பார்த்தல், ஒரு புஸ்தகம், கடிதம் இவைகளின் எதிரொலி அல்லது ஞாபகம் விரைந்து ஓடும் ஆயிரக் கணக்கான தோற்றங்களின் கறைகளினால் மறைந்து போகிறது. ஏனென்றால் சாதாரணமாய் இம்மாதிரி மனிதன் அன்று பகல் நடந்த விஷயங்களின் சம்பந்தமன்னியில் ஒரு எண்ணை அரை குறையாக உச்சரித்துக் கொண்டே தூக்கத்தில் ஆழ்ந்துவிடுகிறான்.

ஜை. எ. ஜே.

"ஏல விவசாயி"

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து
வெளிவரும் ஓர் மாதப் பத்திரிகை.

மலர் 2 | உத்தமபாளையம். விபவ ௵ மாசி ௴ 1929 ௵ பிப்ரவரி—மார்ச்சு ௴ | இதழ் 11

கம்பம் பள்ளத்தாக்கின் செல்வாக்கு.

கம்பம் பள்ளத்தாக்குச் செல்வம் பெருக்குற்றதற்குக் காரணங்கள் பல காணப்படுகின்றன. பலர் பெரியாற்றுத் திருப்புகையின் பின்னர் நாடு செல்வச் சிறப்புற்றதென்றெண்ணியுள்ளார்கள். பெரியாற்றினால் நாடு நீர்வளம பொருந்தி செழுமையுற்றதைத் தவிர ஏல விவசாயம் முற்பட்டதின் பின்னர் பணப்பெருக்கு நிகழ்ந்திருப்பதைப் போல முற்போக்கில் நாணயம் அவ்வளவு சிறந்து விளங்கினதாகக் காணக்கிடைக்கவில்லை. ஆயினும் அவர்கள் வாதிக்கவும் இடமுண்டு. அதைப் பின்னர் யோசிப்போம்.

'ஊரெலாம் பட்டிதொட்டி யுண்பதோ கம்பஞ்சோறு
பேரெலாம் பொம்மன் திம்மன் பெண்களோ நாயும்பேயும்'

என்று இழித்து உரைத்து அவமதிக்கப்பட்ட நாட்டின் ஒரு பகுதியில் நாமும் வதிந்து வருகிறோமென்று சொல்ல நான் கூசுகிறேனில்லை. பெரியாறு திறப்பதற்கு முன்னர் நம் நாட்டில் பெரும்பாலும் கம்பே முக்கிய விளைபொருளாயிருந்திருக்கிறது.

நாடும் கம்பளத்தார் கையில் இருந்துவந்திருக்கிறது. பின்னர் ஒக்கலியர் மற்றும் இதர குடிமக்கள் வந்து குடியேறியிருக்கிறார்கள். கிராமங்களும் மலைபடுத்த பூமிகளாகையினாலே காடு வெட்டிப் பூமியைப் பண்படுத்திக் குடிகள் தங்களுக்கும் ஆடுமாடுகளுக்கும் லாயக்கான வசதியைச் செய்துகொள்ளலானார்கள். சுருளியாற்றின் நீரைக் கொண்டு சிலர் சொற்பம் நஞ்செய்க் கிருஷி செய்து வந்தார்கள். பெரியாறு திருப்பிய பிறகு குடிகள் ஏகோபித்து நஞ்சைக் கிருஷிக்கு ஆசைப்படலானார்கள். ஆனால் பழைய சுருளியாறனைப் பிடித்தே பெரியாறும் செல்கின்றதென்று கண்டவுடன் ஆற்றை விட்டுத் தூரத்தே யுள்ளவர்கள் பெரிதும் மலைப்பெய்தலானார்கள். பெரியாற்றினால் ஆற்றையடுத்த ஒரு சில கிராம நிலச்சுவான்தாரர்களுக்குமட்டுமே பிரயோஜனம் கிடைத்திருககிறது. அதிலும் ஆற்றையடுத்த கிராமங்களிலுள்ள ஏழை எளியவர்கள் நடுத்தர மக்களிவர்களுடைய நிலைமையோ பெரியாற்றினால் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகும்படி நேர்ந்திருக்கிறதென்னலாம். அவர்களுக்குள்ள காணி நிலங்களை நஞ்செய்யாக்குவதற்குள் அவர்கள் கையிலிருந்த மீதம் நகை நட்டுப் பண்ட பாத்திரம் முதலியவைகளை விற்று மேட்டைப் பள்ளமாக்கவும், பள்ளத்தை மேடாக்குவதிலுமே செலவழித்து விட்டனர். பின் வாழ்க்கைக்கு உற்ற துணைப் பொருள்கள் பூச்சியமாய்விட்டன. வயலிலிருந்து நெல் வருமென்று புதிய வெட்டு மண்ணில் விதைத்த பயிர்களிலிருந்து பலனை எதிர் பார்த்து இலவு காத்த கிளி போலானார்கள். நிலத்தைச் செம்மைப்படுத்தின இரண்டு மூன்றாண்டுகளுக்குள் அடுத்த பணக்கார நிலச் சுவான்தாரனுக்கு ஈனக் கிரயத்திற்கு விட்டுவிட்டு கூலி வேலையும் கிடையாது பஞ்சத்தினால் வாடி வதங்கலானார்கள். இப்பொழுது கிட்டக்கட்ட 2,500 ரூபாய்க்குப் போகக்கூடிய ½ செய் நிலத்தை அந்தச் சமயத்தில் 3½ ரூபாய் சேலை ஒன்றுக்கு விற்றிருப்பதாகவும் என் சிநேகிதர் ஒருவர் அவருடைய குடும்ப வரலாற்றை எனக்குச் சொல்லி நிலத்தையுங் காட்டியிருக்கிறார்! ஒருபுறம் 4, 5 செய் நிலமாகிக் கொண்டு போகிறது. இன்னொரு பக்கம் உள்ள நிலத்தையும் கைப்பொருளை

யும் இழந்து சிலர் பஞ்சத்தினால் வாடுகின்றனர். மற்றொரு பக்கம் அவர்கள் பணக்காரர்களாகிறார்களே, நாம் என்ன செய்யலாமென்ற நினைப்பு உதித்தது வாட்டுகிறது. பெரியாறு திறந்த சமயம் நம் நாடு சிறிது திகிலுடனே பெரிதும் புதிய எழுச்சியினால் முன்னேற்றத்தைக் கருதிப் பல வழிகளில் இறங்கத் தயாராய்க் காத்து நிற்கின்றது.

அப்பொழுதுதான் இந்தியாவின் தர்ம விடென்று கருதப்பட்ட நம் காருண்ய மலையாள சர்க்கார் சில வழிகளில் மலை நாட்டில் குடியேற்றஞ் செய்யப் பெரிதும் மனமுவந் திருந்தனர். (அதற்கு முன்னர் ஏலமலைப் பூமிகளும் பெரும் பான்மையாய்க் கிராமத் தலைவருக்கும், பெரிய குடித்தனக்காரர்களுக்குள்ளுமே யேயிருந்து வந்திருக்கிறது). ஏலமலைக் காந்தம் வயிற்றுப்பாட்டுக் காரனையும், முன்னேற்றத்தைக் கருதியவனையும் தன் பக்கமாக இழுத்தது. புதிய சீர்திருத்த முறைகளினால் சக்தியுள்ள எவனும் யதேட்சையாய்ப்போய்க் காடுதிறந்து ஏல விவசாயம் செய்ய வழி திறக்கப் பட்டது. பணக்காரன் முதல் எளியவன் வரை அங்கே தடங்கலின்றிச் செல்லலானான். காட்டை வெட்டிப் பயிர் செய்து பலனையெடுத்து மாதம் பன்னிரெண்டில் 8 மாதம் வீட்டிலேயே உட்கார்ந்து ஜனத்தொகை கணக்கெடுப்பவனிடம் 'சுகஜீவி' என்று சொல்லிக்கொள்ளத் தயங்கினானில்லை. கூலிக்காரன் வயிறு நிரம்பியது. முன்னர் செப்புக்காசு மிதந்த இடம் அது மாறி பெரியாற்றினால் ரூபாயாக நடமாடியது; இப்பொழுது ரூபாய், பவுன், உண்டியல், செக் மூலமாக வரத் தலைப்பட்டு விட்டது. கம்பர் பழித்த கஞ்சிக்குப் பதிலாக எங்கும் சோறு நடமாடலானது. பொய்மன் திமமன் என்ற பேர்கள் நாளடைவில் மறையலாயின. 'எங்கள் காலத்தில் முழுந்தாளுக்குக் கீழேயிறக்கிவிட்டுடுத்திய வெள்ளை வேட்டிக்காரர்கள் காண்ப தரிதென்று சொல்லிய கிழவர்கள் தெருத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு கண்ணைக் கசக்கி விறைத்து விறைத்துப் பார்க்கிறார்கள். காலையிலிருந்து மாலை வரைக்கும் இப்பற்றையோ டொப்ப விவசாய லட்ச

ணம் பொருந்தி யுழைத்த பெண் மக்கள் அந்தப்புறத்தி லடைபட்டுக் கிடக்கின்றனர். கோழி கூவுகிறதற்கு முன்னமே எழுந்து பார்ப்பன பார்த்துத் தூரத்திலேயுள்ள காட்டுக்குக் கஞ்சிக் கலயங் கொண்டு போகிறவள் 7-30 மணிக்குப் 'படுக்கைக் காப்பி தயாரிலிருக்கிறதா' என்று அதிகாரத் தொனியுடன் வேலைக்காரனைக் கூவியழைக்கிறாள். அவர்களுக்கென்ன குறை? பச்சைக் கொழுந்து வெற்றிலைகள் தபால் மார்க்கமாய் தூரந் தொலைகளிலிருந்து கூட அவர்களுடைய இல்லங்களுக்கு வரலாயின. நாட்டுத் தட்டான் பிச்சை யேற்குப்படி கேசே பி. ஆர் அண்டு சன்ஸ் கம்பெனியில் வழக்கமான பற்று வரவு கணக்குப் பக்கங்கள் திறக்கப்பட்டன. காசி முத்தையா அண்டு கம்பெனியாரின் பட்டுப் பட்டாடைக் கிரய ஜாபிதா இல்லங்கடோறும் வந்து புகுந்து கிடக்கின்றன. உடை, நடை, பாவனை திடீரென மாயம்போல் மறைந்துவிட்டன. பட்டுத் துணிகளிலேயே பலர் புரண்டுருண்டு கிடக்கின்றனர். பிராந்தி சர்வ சாதாரணமாக மாறி விட்டது. கூலி வேலைக்காரன் முதல்கொண்டு காப்பியிலிருந்து கொக்கோ வரையிலுமுள்ள தயார் செய் பாகத்தைக் குறை கூறத் தலைப்பட்டு விட்டான். இவைகளைக் கொண்டு பணப்பெருக்கு ஏல விவசாயத்திலிருந்தே நம் பக்கத்தில் உண்டாகியதென்று சொல்லிக்கொள்கிறவர்களில் நானுமொருவனாகும்.

எவ்வளவு சீக்கிரத்தில் எவ்வளவு மாறுதல்! இவ்வளவும் ஏலந்தானா செய்து வைத்திருக்கிறது? ஆம். அதற்கொரு ஆட்சேபணையுமில்லை. நிச்சயந்தான்.

செல்வம், ஏலம் என்ற இருபதங்களும் வேடிக்கையை விளைவிக்கக்கூடிய பதங்கள். 'நீர் எம்மைச் செம்மையாய் வைத்துப் பேணும், இன்றேல் நாளையே நாம் உம்மை விட்டுச் செல்வம்' என்று செல்வி மூர்த்தனிடத்தில் எச்சரித்து விட்டுப் போவதையொத்து ஏலமும் 'நீர் ஒழுங்காயிரும், அன்றேல் நாம் உம்மை ஏலேல'மென்று சொல்லிக் கொண்டே ஏலம் போட்டு விடுவம். சகோதரர்களே கவனித்துப் பாருங்கள், எத்தனை குடும்பங்கள் ஊதாரித் தனத்தினால், டாம்பீகத்தினால், மேனாட்டு நாகரீகத்தி

னால் தலை கீழாகப் புரட்டப்பட்டுக் கிடக்கின்றன. எத்தனை புதிய ஆவேசமுள்ள முயற்சி மிகுந்த இளங்காளைகள் கீழேயிருந்து மேலே தூக்கப்பட்டு யாவராலும் போற்றப்பட்டு வருகிறார்கள். நல்ல ஏலம், நியாயமான ஏலத்தாய். ஏல விவசாயப் பெருமான்களே! நமக்கு எவ்வளவு செல்வத்தை அவள் ஈந்திருக்கிறாள். எத்தனை மடங்கு பெருமை பயந்திருக்கிறாள். கூர்ந்து ஆலோசித்துப் பாருங்கள். அவளைப் போற்றிப் புனித வாழ்வில் நம்மை ஈடுபடுத்தி உள்ள சவுகர்யங்களை அநுபவித்துத் திருப்தி கொள்ளாமல் போலிச் சுகங்களுக்குப் பின் ஏன் நாம் ஓடித்திரிய வேண்டும். எவ்வளவு பணம் வீணாய் விரயமாக்கப் படுகிறது. பாரபக்ஷமில்லாத ஏலத்தாய் 'இருங்கள் உங்களுக்குப் புத்தி புகட்டுகிறேன்' என்று திடீரென தன் மதிப்பைச் சுருக்கிக்கொண்டாள், விளைவு திடீரெனத் தாழ்ந்தது. தன்னைத் தஞ்சமென் றடைந்தவர்களை ஒருபொழுதும் பறக்கவிட்டு வேடிக்கை பார்க்கிறவ ளல்லள், நம் ஏலத் தாய். சலியாத முயற்சியுள்ள மேதாவிகளை தக்க சன்மானத்துடன் மேடைமீதேற்றி வைத்தாள். மேடைமீதிருக்க யோக்யதை இல்லாதவர்களைக் கீழே இறங்கச் சொன்னாள், பாதி இறங்கிவிட்டார்கள். இனி ஒழுங்காய் நடப்போம், புத்தி வந்தது என்று ஒருசிலர் சீர்திருந்தி வருகிறார்கள். சிக்கனமும், ஒழுக்கமும், வினையாற்றுந் திறனும் படைத்த இளங்காளைகளைக் கண்டு ஒருசிலர் பொறாமை இருள் போர்வையினால் மூடப்பட்டு இருக்குமிடந் தெரியாமல் மறைந்து நிற்கிறார்கள். சகோதரர்களே அவளின் குணமறிந்து ஒவ்வொருவரையும் சீர் திருத்திக் கொள்ள வேண்டும். கூட்டுறவின் மூலமாக மறுபடியும் நல்ல விலைக்கு அவள் கொண்டுவந்திருக்கிறாள். அவளையின்றி கூட்டுறவு எங்கே! விலை எங்கே! என்பதை மறந்துவிடாதீர்கள். இவைகளுக்கெல்லாம் கடைசியாக நம்மைப் பின்னும் ஒரு பெரிய சோதனைக்குள் ஆளாக்கியிருக்கிறாள். அதைக் கவனியா திருப்போமாகில் நம் கதி அதோ கதிதான். அச் சோதனை தானென்ன. ஏலத் தாய் வியாதிப் படுக்கையில் இருந்துகொண்டு வருகிறாள். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? வியாதி, அசிரத்தையா யிராதீர்கள். உடன் பிறந்தே கொல்லும் வியாதி. சகோதரர்களே, நீங்கள் என்ன சிகிச்சை செய்யப் போகிறீர்கள்? நம்முடைய பலத்த ஆதாரவுள்ள அன்பான ஏலத் தாய் படுத்த படுக்கையிலிருக்கிறாள்! எழுந்திருங்கள். வைத்தியஞ் செய்யுங்கள்.

S. வடிவேல், சூப்பிரண்டு,
பொன்முடித் தோட்டம்.

விவசாயத்தின் மேன்மை.

உலகில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட மானிடர்கள் சுகமாய் வாழ்வதற்கு அநேக தொழில்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளுள் பயிர்த் தொழிலே யாவற்றிலும் சிரேஷ்டமானது. இது பற்றியே

> "ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
> வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே—ஏற்றம்
> உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
> பழுதுண்டு வேறோர் பணிக்கு." (நல்வழி)

என்றும்,

> "தொழுதூண் சுவையினும்
> உழுதூண் இனிது" (கொன்றைவேந்தன்)

என்றும் கூறப்பட்டிருக்கிறது.

பிறரிடம் சேவகம் செய்து பணம் சம்பாதித்து ஜீவனம் செய்வதைவிடத் தாமாகவே கஷ்டப்பட்டு வயல்களில் வேலை செய்து பயிரிட்டு அதன்மூலமாய் இல் வாழ்க்கை நடாத்துவது மிகவும் மேன்மையாகும்.

உத்தியோகத்திற்கும் பயிர்த் தொழிலுக்கும் உள்ள தாரதம்மியங்களை விளக்குதற் பொருட்டே

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
> தொழுதுண்டு பின்செல் பவர்."

என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். தற்போது அநேகர் தமது புத்திரர்களுக்குக்

கல்வி பயிற்றுவித்து, அதன் மூலமாய் அவர்கள் உத்தியோகம் செய்து பணஞ் சம்பாதிப்பதை மிக்க பெருமையாகக் கருதுகிறார்கள். சிறப்பு வாய்ந்த கல்விச்செல்வத்தை உத்தியோகத்தின் பொருட்டே அடையவேண்டும் என்று நம்மவர்களில் சிலர் கருதியிருப்பது சரியல்ல.

> "கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
> மாடல்ல மற்றையவை."

என்னும் நாயனார் வாக்கிற் கேற்பப் பிறரால் அபகரிக்கப் படாததும், கொடுக்கக் குறையாததும் ஆகிய பெறுதற்கரிய கல்விச் செல்வத்தைப் பாரத மாதாவின் மக்களாகிய ஆண், பெண் இருபாலாரும் அடைய உரிமையுண்டு. பிரகாசம் பொருந்திய விளக்கிற்கும் ஓர் தூண்டுகோல் எவ்வாறு அவசியமோ அவ்வாறே மானிடர்களின் மனதில் உள்ள அஞ்ஞானத்தைப் போக்கி அறிவுச் சுடர் கொளுத்துவதற்குக் கல்வி மிகவும் இன்றியமையாதது. ஆதலால் நம்தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானால், நம் தேசத்தில் உள்ள ஒவ்வொருவரும் அவசியம் கல்வி கற்க வேண்டும். கல்வி கற்றவர்கள் சமயம் நேர்ந்தபோது உத்தியோகம் செய்வதால் தவறில்லையாயினும், உத்தியோகத்தின் பொருட்டே கல்வி அவசியம் என்னும் எண்ணம் நம்மவர்கள் மனதினின்றும் ஒழிய வேண்டும்.

உலகில் உள்ளமக்கள் அனைவரும் ஜீவிப்பதற்கு உழுதொழிலாளர்களே முக்கிய ஆதாரமாய் இருக்கிறார்கள். இது பற்றியே

> "உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
> தெழுவாரை யெல்லாம் பொறுத்து"

என்று தமிழ்மறை மொழிகின்றது. ஆதலால் நகரங்களில் உத்தியோகம் செய்து பணம் சம்பாதித்து அதனால் சந்தோஷமாய் உண்டுகளித்துப்பறபல விசித்திர ஆடையணிகளால் அலங்கரித்துக் கொண்டும் களியாட்டில் மூழ்கிக்கிடக்கும் அழகிய மாளிகைகளில்

வசிக்கும் கனவான்களுக்குக் கிராமவாசிகள் உழுது பயிர் செய்யாவிடில் அன்னம் எங்கிருந்து கிடைக்கும்? நகர்ப்புறங்களில் வாழும் சிலர் கிராம வாழ்க்கையையும், குடியானவர்களையும் பற்றிக் கேவலமாகக் கருதுகின்றார்கள். இது சரியல்ல.

> "மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
> தானம் தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின்
> கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
> பசிவந்திடப் பறந்து போம்."

என்பது போல் ஒருவன் அழகிய மாளிகையில் வசித்தபோதிலும் அவன் வீடுநிறைய விலையுயர்ந்த பொன் வெள்ளிச் சாமான்களும் மற்றும் அலங்காரப் பொருள்களும் இருந்த போதிலும், அவன் மனைவி மக்கள் அழகிய ஆடைகளால் அலங்கரிக்கப் பெற்றிருந்த போதிலும், அவன் ஏவிய வேலைகளைச் செய்யப் பணிமக்கள் பலர் இருந்த போதிலும், இன்னும் பற்பல சௌகரியங்கள் வாய்ந்திருந்தபோதிலும், அவனுக்கு ஒருபிடி அன்னம் கிடைக்காவிடில் அவனுக்கு வாய்ந்துள்ள செல்வங்களினால் யாது பயன்? அவனுக்கு சந்தோஷம் ஏது? ஆதலால் உயிர் நிற்பதே ஒரு பிடி அன்னத்தில் அடங்கியிருக்கிறதென்பது தெற்றென விளங்குகிறதல்லவா?

இதுபற்றி ஓர் சிறு கதையுண்டு. அதாவது:—

"ஓர் காலத்தில் ஒரு ஊரில் தனவந்தரான பிரபு ஒருவர் அழகிய மாளிகையொன்றில் வசித்து வந்தார். அவர் தமக்குச் சொந்தமான வயல்களில் ஆள்களைக் கொண்டு பயிர் செய்வித்து, அதில் விளையும் தானியங்களைக் களஞ்சியம் கட்டிவைத்துக் கொண்டு தாமும் உண்டு, வரும் விருந்தினர்களுக்கும் இட்டுவந்தார். அவருக்கு ஏராளமான செல்வம் இருந்த போதிலும், பயிர்த்தொழிலின்மீது கண்ணும் கருத்துமாயிருந்து வந்தார். ஒரு தானிய மணியும் வீணாகச் சிதறுவதைக்காண அவர் மனம் பொறாது; ஆனால் அவர் உலோபியல்ல. தமது வேலைக்காரர்களிடத்தில் பக்ஷமாயிருப்பார். விருந்தினர்களை வெகு அன்புடன் உபசரிப்

பார். ஒரு நாள் அவர் வீட்டிற்குச் சில விருந்தினர்கள் வந்தார்கள். அவ்விருந்தினர்கள் கொடைவள்ளலென்று யாவராலும் புகழ்ந்துகூறப் பெற்ற அப்பிரபுவிடம், ஏதாவது இனும் வாங்க எண்ணி வந்தார்கள். அப்போது பிரபு வீட்டில் இல்லை; வயல்களைப் பார்க்கச் சென்றிருந்தார். பிரபு வீட்டில் இல்லையென்பதை வேலைக்காரன் மூலமாய் அறிந்த விருந்தினர்கள் பிரபுவின் வருகைக்காகக் காத்திருந்தார்கள். பிரபுவின் பரிசாரகன் ஏதோ அஜாக்கிரதையினால் சமையல் வேலையை முடிக்கவில்லை. காலத்தில் சமையல் செய்யாததற்காகப் 'பிரபு கோபிப்பார்' என்று அஞ்சிய பரிசாரகன் ஓர் தந்திரம் செய்தான். பிரபு வெளியிலிருந்து வீட்டுள் நுழையும் தெருவாயிற்படியில் சிறிது தானியங்களை இறைத்து வைத்தான். வெளியிற் சென்றிருந்த பிரபு திரும்பி வந்தார். வழியில் இறைந்து கிடந்த நெல்மணிகளைக் காண அவர் மனம் மிகவும் பதைத்தது. உடனே அவர் அமைதியாய் அத்தானிய மணிகளைப் பொறுக்கிச் சேர்க்க ஆரம்பித்தார். அதைப் பார்த்திருந்த விருந்தினர்கள் இவ் வற்ப நெல்மணிகளை வீணாக்க மனம் பொறாத இப்பிரபு நமக்கு எவ்வாறு இனும் அளிக்கப் போகிறார்? உலோபியாகிய இப் பிரபுவிடம் நாம் வந்தது வீண்தான் என்று தத்தம் மனதில் யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

> "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
> கடுத்தது காட்டும் முகம்"

என்பதே போல், விருந்தினர்களின் மனோ நிலைமையை அவர்களின் முகத்தைப் பார்த்த உடனே பிரபு அறிந்து கொண்டார். இதற்குள் சமையல் முடிந்து விட்டது. பிரபு விருந்தினர்களை க்ஷேமம் விசாரித்தபின் பற்பல விஷயங்களைப் பற்றிச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு அவர்களை அழைத்துக் கொண்டு உட்சென்றார். அங்கு மூவர்களுக்காகவும் இலைகள் போடப்பட்டிருந்தது. யாவரும் போஜனம் உண்ண உட்கார்ந்தார்கள். விருந்தினர்கள் மிகவும் பசியோடிருந்தமையால் போஜனத்திற்காக ஆவலோடு காத்திருந்தார்கள். முன்னமே பிரபு உத்திரவிட்டிருந்த

படி பரிசாரகன் பிரபுவின் இலையில் காய் கறிவகைகளும், அன்னமும் வட்டித்தான். விருந்தினர்களின் இலைகளில் விலையுயர்ந்த நவரத்தினக் கற்களை அன்னத்திற்குப் பதிலாகப் பரிமாறினன்.

அதைக் கண்ட விருந்தினர்கள் அதிக வியப்புற்று, செய்வதின்னதென்று தோன்றாமல் விழித்துக் கொண்டிருந்தார்கள். பசிவேளைக்கு ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் கற்களை என்ன செய்ய முடியும்? ஒரு பிடி எடுத்து வாயில் வைக்க முடியுமா? தாம் பிரபுவைப் பற்றி எண்ணிய அபிப்பிராயத்தை அறிந்தே அவர் அவ்வாறு செய்தார் என்பதை உணர்ந்த விருந்தினர்கள், தங்கள் புத்தியீனத்தால் பிரபுவைப்பற்றிக் கேவலமாக நினைத்ததற்காக மனம் வருந்தி வெட்கி முகம் கவிழ்த்து நின்றார்கள். பிரபு விருந்தினர்களின் மனக் கலக்கம் நீங்குமாறு அவர்களோடு இன்முகங் காட்டிப்பேசி, அவர்கள் அறியாமையால் செய்த குற்றத்தை மன்னிப்பதாகக்கூறி, நவமணிகளைவிடத் தானியமணிகளே பிரதானமானவைகள் என்பதைப்பற்றி நீண்ட ஓர் பிரசங்கம் செய்து பின் அவர்களுக்கு அறுசுவை உண்டியும் இட்டு வேண்டிய சாமான்களையும் வழங்கி அனுப்பினார். விருந்தினர்களும் தமது மனமாறப் பிரபுவை வாழ்த்திக் கொண்டே சென்றார்கள்.,,

இக்கதையால் ஒருவருக்கு எவ்வளவு செல்வம் இருந்தபோதிலும், ஒரு பிடி அன்னம் கிடைக்காவிடில் ஒரு பிரயோஜனமும் இல்லையென்பது "அன்னை செல்வி பெண" விளங்குகிறதல்லவா? ஆகையால் அவ்வளவு சிறப்பு வாய்ந்த நெல்மணிகளைப் பயிரிடும் குடியானவர்களையும், அவர்கள் தொழிலையும் பற்றிக் கேவலமாகக் கூறுவது சரியாகுமா?

நகர வாழ்க்கையைவிடக் கிராம வாழ்க்கை பலவிதத்திலும் மேலானதாய் இருக்கிறது. கிராமங்களில் சுத்த ஆகாயமும் போதிய வெளிச்சமும், நல்ல தண்ணீரும் ஏராளமாய்க் கிடைக்கும். நகரங்களில் இம்மூன்றும் சரியாய்க்கிடைக்கிறதில்லை. தேகசுகத்திற்கு முக்கிய ஆதாரங்களாகிய இம்மூன்றும் சரியாய்க்

கிடைக்காவிடில் மனிதர்கள் எவ்வாறு சுக தேகிகளாய் ஜீவித்திருக்கக்கூடும்? இதற்குக் கண்கூடாக நகரங்களில் வசிக்கும் ஜனங்களில் அநேகர் நோய்வாய்ப்பட்டு பலவீனர்களாய் மருந்தும்கையுமாக இருந்து டாக்டர்களுக்குப் பணத்தை வாரி இறைத்துத் தேக சுகத்திற்காகவேண்டி டாக்டர்கள் குறிப்பிடும் கிராமங்களை நாடிச் செல்லுகிறார்கள். நோயில்லாமல் இருப்பவர்களும் கூடப் போதிய தேக பலமின்றி மெலிந்து இருக்கிறார்கள். நகரங்களில் செயற்கைக் காக்ஷிகளைக் காணலாம். ஆனால் எல்லாம் வல்ல சர்வேஸ்வரனால் நிருமாணிக்கப்பட்ட இயற்கைக் காக்ஷிகளைக் கிராமங்களில் கண் குளிரக்காணலாம். எங்கு பார்த்தாலும், செழித்து வளர்ந்த பற்பல கனிதரு விருக்ஷங்களின் தோப்புகளும், அத்தோப்புகளில் அநேக பக்ஷி ஜாலங்கள் ஆங்காங்கு மரங்களில் உட்கார்ந்து இனிமையாகப் பாடிக்கொண்டிருப்பதும் பார்ப்பதற்கு மிகவும் மனோரம்மியமாய் இருக்கும். காலை நேரங்களுக்கு வயல்களுக்குச் சென்று பார்த்தால் அங்குத்தோன்றும் காக்ஷி மிக நேத்திரானந்தமாக இருக்கும். வயல்களில் விளைந்திருக்கும் பயிர்கள் பச்சைப் பசேலென்றும், குளிர்ச்சியாகவும் காணப்படும். வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும் குடியானவர்கள் தங்கள் இனிமையான குரல்களால் பாட்டுப் பாடிக்கொண்டு ஏற்றங்களின் மீதிருந்து துரவுகளிலிருந்து தண்ணீர் இறைத்துக் கொண்டிருப்பார்கள். கூலி வேலை செய்யும் ஏழைகளாகிய தாழ்ந்த மக்கள் தத்தம், மனைவி மக்களோடு வயல்களில் நாற்று நட்டுக்கொண்டும், களை பிடுங்கிக் கொண்டும், மற்றும் பற்பல வேலைகளை மிகச் சுறுசுறுப்போடு செய்து கொண்டுமிருப்பார்கள். அவர்களுடைய மக்கள், ஆடுகளையும் மாடுகளையும் மேய்த்துக் கொண்டிருப்பார்கள். சிற்சில ஊர்களில் ஆகாயத்தை அளாவிய மலைகளையும், வழியில் அகப்படும் வஸ்துக்களை யெல்லாம் அடித்துக் கொண்டு ஓடும் ஆறுகளையும் காணலாம். அவ்வாற்றோரங்களில் முளைத்திருக்கும் பற்பல புஷ்பச் செடிகளையும் அச்செடிகளின் புஷ்பங்களில் உள்ள தேன்களைக் குடிக்கத் தேனீக்கள் ரீங்காரம் செய்து கொண்டிருப்பதையும் காணலாம். இன்னும் கிராமங்களில் இரமணீயமான அநேக காக்ஷிகளைக் காணலாம்.

தெய்வம் காட்டும்; ஊட்டுமா? என்ற ஒரு பழமொழி உண்டு. அதுபோல் இயற்கையிலேயே மற்ற தேசங்களைவிட நம் இந்தியா தேசம் மிகவும் செழிப்பு வாய்ந்தது. நம்மவர்களின் ஊக்கமின்மையால்தான், மற்ற தேசத்தில் உள்ளவர்களைவிட நாம் மிகவும் கஷ்ட நிலைமையை அடைந்திருக்கிறோம். நம் தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானால், ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும், மாணவர்களுக்கு விவசாயக் கல்வியை அவசியம் போதிக்கப்படல் வேண்டும். பயிர்த்தொழில் செய்வோர்களுக்குத் துரைத்தனத்தார் பற்பல வசதிகள் செய்துதரல் வேண்டும். அநேக புதிய முறைகளால் பயிர் செய்ய முயற்சிக்க வேண்டும்.

P. V. சரோஜினிதேவி.

திராட்சைச் செடி.

இச்செடியானது கோதுமை, நெல் முதலிய தானியங்கள் விளைகின்ற எல்லா நிலங்களிலும் உண்டாகத் தக்கது. நிலம் அதிகம் செழிப்பாயிருக்க வேண்டியதில்லை. ஆனால் இலகுவில் உழத் தக்கதும், உதிர்ந்து பொடியாகத் தக்கதுமான இறுக்கமற்றதாயிருப்பதும், நீர் தேங்காமல் வடிந்துபோகத் தக்க நெருக்கமற்றதாயிருப்பதும் அவசியம். நிலம் மணல் கலந்த மண்ணாயிருந்தால்தான் வேர்கள் நன்றாய்ப் பரவி அதிலுள்ள சாரத்தை இலகுவாய் உறிஞ்சும். ஆகவே மணல் அல்லது செம்மண் கலந்த கருப்பு நிலம் மாத்திரம திராட்சைச்செடிக் கிருஷி செய்கைக்குத் தெரிந்துகொள்ளப்படத் தக்கதாகும். இரண்டு அல்லது மூன்று அடிக்குக் கீழாண்டும், மெல்லிய கிறவலாவது சுண்ணாம்பாவது கலந்ததுமான நிலமும் விரும்பப்படத் தக்கது. கீழ்ப்படையான மண்ணும் அதனோடு சேர்ந்த கிறவல் முதலியனவும் மேலுக்கு

வருவிக்கப்பட்டு கிருஷி நிலத்தையே பரவப்படுதலால் இப்படிப்பட்ட நிலத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளலாம். நிலம் அதிகம் கொழுத்திருப்பதும், வளமற்ற காம்பு நிலமாயிருப்பதும் ஆகாவாம்.

திராட்சைச் செடிகள் நான்கு விதமாய்ப் பயிரிடப்படுகின்றன. விதையிட்டு முளைப்பித்தல், இளஞ்செடி நடல், பதியம் வைத்தல், கிளை நறுக்கி நடல் என்னும் நான்கு வகையாகவும் பயிரிடுகின்றார்கள். இந் நான்கு வகையுள் விசேஷமானது, கிளைகளை வெட்டி நட்டு உண்டாக்குவதேயாம்.

கிளை நறுக்கல். ஒவ்வொரு வருஷமும் குளிர்காலம் ஆரம்பித்தவுடன் கிளை நறுக்கப்பட வேண்டும். அப்பொழுது அதற்கு 4 மாசத்திற்கு முன் தொடங்கி வளர்ந்த கிளைகளெல்லாவற்றையும் நறுக்கிவிடுவார்கள். அடியில் மூன்று நான்கு கணுக்கள் வரையிலுமுள்ள இலைகளும் துளிர்களும் மாத்திரம் விடப்படும். அறுத்தெடுத்த கிளையின் அடிப்பாகம் நன்றாய்த் தடித்து உரத்து முரணாயிருக்கும். அந்தப் பாகத்திலேயே ஒன்பது அங்குலமுதல் பத்து அங்குல நீளமான துண்டு வெட்டி எடுக்கப்படும். இப்படிப்பட்ட துண்டுகளையே நட்டுப் பயிராக்குவார்கள். நடுவதற்குத் துண்டு வெட்டும்போது அடிக்கு அரை அங்குலம் மேலும், நுனிக்கு அரை அங்குலங் கீழும் கணு இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தத் துண்டுகளை நடுவதற்குப் பன்னிரண்டு அல்லது இருபத்துநான்கு மணி நேரம் சுத்த ஜலத்தில் ஊறவைக்க வேண்டும். இந்தச் சலத்தை ஓர் பானையிலிட்டு அதிலே துண்டுகளைப் போட்டுவைப்பது நலம்.

கிருஷி. மேற்படி துண்டுகள் நாற்றுகளாகக் கொள்ளப்படும். இவைகளை நடும் நிலம், இரண்டு மாசத்துக்கு முந்தியே உழுது செய்கை பண்ண ஆரம்பிக்க வேண்டும். களைகள் முற்றிலும் அகற்றப்பட வேண்டும். நிலம் சமப்படுத்த வேண்டும். பின் நான்கு அடி நீளம், நான்கு அடி அகலமான சிறு பாத்திகள் வகுக்கப்படலாம். இந்தப் பாத்திகளில் 9 அங்குல தூரத்திற்கு ஒன்றாய் உழவு சால் போலுங் கீறுகள் அமைத்து, அவற்றில் 6 அங்குல-தூரத்திற்கு இரண்டு வீதம் துண்டுகளை நடவேண்டும்.

161155619

தண்ணீர் பாய்ச்சலே. திராட்சைச் செடி மழை அதிகமாய்ப் பெய்யுமிடங்களிற் செழித்து வளரமாட்டாது. வருஷமொன்றுக்குச் சராசரி 29 அங்குல மழை பெய்யும் நாசிக் என்னும் நம் இந்திய மாகாணத்திலே திராட்சைச் செடி நன்றாகப் பயிராகின்றது. வருஷத்தில் 35 அல்லது 40 அங்குல மழை பெய்தால் அது பயிராகாது. ஆயின் சீதோஷ்ண வித்தியாச முண்டானாலும், சடுதியில் தன் வளர்ச்சியிலும் செழிப்பிலுங் குறைவு காட்டாது. காஷ்மீரத்துத் திராட்சைச் செடிகள் பிரான்சிலும், காபூலிலுள்ள செடிகள் பெங்களூரிலும் ஒரே விதமாக வளர்வது கண்கண்ட காட்சி.

திராட்சைச் செடியின் இனங்கள். திராட்சைச் செடியில் பல இனங்கள் உண்டு. இந்தியாவில் பயிராகும் திராட்சைச் செடிகளெல்லாம் ஐரோப்பாவிலே அதிகமாய்ப் பயிரிடப்படுகின்ற வைடிஸ் வைனிப்ரா என்னுந் தாவர வர்க்கத்தைச் சேர்ந்தவைகளாம். இந்தத் திராட்சைச் செடியில் 150 இனங்களுக்கு மேலுண்டு. அவற்றுள் இந்தியாவிலே திராச்சைச் செடிச் செய்கைக்குப் பேர்போன நாசிக்கென்னுமிடத்திற பின்வரும் இனங்கள் மாத்திரஞ் செய்கை பண்ணப்படுகின்றன.

1. அப்சி அல்லது காலி. இந்த இனத் திராட்சை பிளாக் மோராகோ எனப்படும். இது நன்றாய் வளரும். ஆனால் அதிக பலன் கொடுப்பவையல்ல. பழக் குலைகள் பெரிதாயும், அகலித்துமிருக்கும். ஒவ்வொரு பழமும் கறுப்பாயும், பெரிதாயும், கோழி முட்டையைப் போல் நீண்டும் உருண்டுமிருக்கும்.

2. நீலா. இதை பிலலாஸ் பாகண்டி என்றுஞ் சொல்வார்கள். செடிகள் நன்றாய் வளரும். இலைகள் பெரிதாயும், ஓரங் கருக்குள்ளவைகளாயும் இருக்கும். பழக் குலைகள் நடுத்தரமாயிருக்கும். பழங்கள் கறுத்து நீண்டு உருண்டு இருக்கும்.

3. குரேனு. இந்தச் செடி ஏராளமாய்க் காய்க்கும். பழக் குலைகள் சிறியவை. பழம் சிறியதும், குண்டைப்போல உருண்டுமிருக்கும். அவை ருசியுடையனவல்ல. ஒரே காலத்திற் பழுக்காது, முந்தியும் பிந்தியும் பழுக்கும்.

சுதேசக் கைத்தொழிலை ஆதரியுங்கள்.

அநேக வருடங்களுக்கு உத்தரவாதமுள்ள
இரும்புச் சாமான்கள்.

குறைந்த விலை! உயர்ந்த ரகம்!! மிகுந்த பலம்!!!

கீழே குறிப்பிட்டிருக்கும் இரும்புத் தொழிற் சாலையை நாம் நேரில் போய் கண்டிருக்கிறோம். அதில் கைதேர்ந்த வேலை ஆள்களைக்கொண்டு கதவுகள், பலகணிகள், கேட்டுக்கு பூவேலைச் சாமான்கள் முதலியவற்றை அழுத்தமாகவும், திருத்தமாகவும் செய்யப்பட்டு வருகிறதென்பது உண்மை. விலைகளை சகாயமாகவும் குறித்த காலத்தில் ஆர்டர்களைக் கவனித்தும் கொடுக்கிறார்கள். அழகுபடவும் செய்கிறார்கள்.—பத்திராதிபர்.



எல்லாவித கட்டிடங்களுக்கும் ஏற்றவைகளும் அநேக தினுசு இரும்பு கிராதிகள், ஸ்பிரிங் கதவுகள், ஆபீசுகளுக்கு வேண்டிய சேர், சோபா, ஸ்டூல்கள், முதலியவைகளை வார்ப்பு சாமான்களைக் காட்டிலும் மிகுந்த உறுதியாயும் எவ்விதத்திலும் உடையாததாயும் அழகாயும் பார்வையாயும், இலகுவாய் ஜாயிண்டு செய்யக் கூடியதாயும் நவீன தினுசில் உறுதியாக தயார் செய்து ஏராளமான சாமான்கள் விற்பனை செய்து வருகிறோம்.

தங்கள் கட்டிடங்களுக்கு வேண்டிய கிராதிகள், ஸ்பிரிங்கதவுகள், பூட்டுகள் முதலிய இரும்பு சாமான்களுக்கு ஆர்டர் எழுதுங்கள். விலை விபரங்களடங்கிய காட்லாக் இனாம்.

புரோப்ரைட்டர்:—
P. N. ராஜகோபாலய்யர்.

மஹா லக்ஷ்மி இரும்புத் தொழிற்சாலை,
மதுரை.